# 56

# தேவாலய அழிவு குறித்து இயேசு முன்னுரைத்தலும் சீஷர்களின் கேள்விகளும்

## (24:1-3)

மத்தேயு 23ல் இயேசு வெளிப்படையாக வேதபாரகர் பரிசேயர் என்பவர்களின் மாய்மாலத்தையும் அவர்கள் அவரைப் புறக்கணித்தலையும் குறித்து ஏழு வரிசைப்படுத்தப்பட்ட ஐயோ எனும் பதத்தை உபயோகித்து பேசுகிறார். அந்த அதிகாரத்தின் முடிவிற்கு முன், அவர், “இவைகளெல்லாம் இந்த சந்ததியின் மேல் வரும்” என்று சொன்னார் (23:36). மேலும், “உங்கள் வீடு பாழாக்கி விடப்படும்!” என்றும் சொன்னார் (23:38). இந்த தீர்க்கதரிசனங்கள் அதிகாரங்கள் 24, 25 ற்கான தனிப்பட்ட போதனைகளுக்கு வழிவகுத்தது, இந்த அதிகாரங்களில் எருசலேமின் அழிவையும் அவருடைய இரண்டாம் வருகையையும் உலகத்தின் முடிவு காலத்தையும் விளக்கமாக அவர் போதித்தார். இந்தப் போதனையை இயேசு ஒலிவ மலையின் மேல் கொடுத்தமையால் இது “ஒலிவ மலை போதனை” என்று இன்று குறிப்பிடப்படுகிறது. இந்தப் போதனை உண்மையில் சீஷர்களின் கேள்விகளுக்குக் கொடுக்கப்பட்ட பதில்களாகும்; புதிய ஏற்பாட்டிலேயே கேட்கப்பட்ட கேள்விகளில் இந்தக் கேள்விக்குத்தான் இயேசு ஒரு நீண்ட பதிலைக் கொடுக்கிறார்.

இந்த அதிகாரத்தை வியாக்கியானம் செய்வதில் ஒரு குழப்பத்தைக் கொடுக்கிற பதிலாக அமைந்துள்ளது. இதில் ஒரு கடினமான காரியம் என்னவெனில் இயேசு ஒவ்வொரு தனிப்பட்டக் கேள்விக்கும் தனித்தனியாகப் பதில் கொடுக்கவில்லை; அவர் தமது போதனையை எருசலேமின் அழிவு இரண்டாம் வருகை மற்றும் உலகத்தின் முடிவு ஆகியவற்றை மாறிமாறி பேசுகிறார். இதினால் இந்த அதிகாரத்திற்கு புறக்குறிப்பைக் (பகுப்பைக்) கொடுப்பதும் புரிந்து கொள்வதும் கடினமாகிறது. அத்துடன் அவரது போதனையில் வெளிப்பாடுகளும் உவமைகளும் இடம் பெற்றிருப்பதும் ஒரு சவாலாகும். ஆதலால், இதை வாசிப்பவர் நேரடி பொருளுக்கும் உருவகத்துக்கும் அல்லது உதாரணத்துக்கும் உள்ள வேறுபாடுகளையும் காணவேண்டும். கூடுதலாக, தீர்க்கதரிசன முன்னோட்டமும் இந்த அதி காரத்தில் இடம் பெற்றுள்ளன. எருசலேமின் அழிவைக் குறித்த முன்னுரைத்தல் கி.பி. 70ல் நிறைவேறிற்று, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (இரண்டாயிரம் வருடங்கள் போலாகியும்) இன்னமும் நிறைவேற வில்லை. இருந்தும் இயேசு அவைகள் ஒன்றாக சமீப காலத்துக்குள்ளாகவே நிறைவேறுவதைப்

*போன்ற தோற்றத்தில் பேசினார் (24:29). தீர்க்கதரிசன முன்னோட்டங்கள் தொலைவிலிருந்து பார்க்கும் இரண்டு மலைகளைப் போன்றது: தோற்றத்தில் அவைகள் ஒன்றாக இருப்பது போல் தோன்றும், ஆனால் உண்மையில் அவைகள் மைல்கணக்கில் இடைவெளிகளில் இருக்கும்.*

*இந்த அதிகாரம் தேவாலயத்தின் அழிவை இயேசுவின் முன்னறிவித்தலுடன் தொடங்குகிறது (24:1, 2), தொடர்ந்து அது சம்பவிக்கும் காலத்தையும் இரண்டாம் வருகையையும் குறித்தும் சீஷர்களால் கேள்விகள் கேட்கப் பட்டன (24:3). அதிகாரத்தின் மீதி பகுதி (24:4-51) அவர்கள் கேட்ட கேள்விக்கு கர்த்தர் கொடுக்கும் பதிலை உள்ளடக்கியுள்ளது.*

## எருசலேமின் அழிவைக் குறித்த அவருடைய முன்னறிவிப்பு (24:1, 2)

***1இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுப் போகையில், அவருடைய சீஷர்கள் தேவாலயத்தின் கட்டடங்களை அவருக்குக் காண்பிக்க அவரிடத்தில் வந்தார்கள்.***

***2இயேசு அவர்களை நோக்கி, இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.***

***வசனம் 1. இயேசு** 21:23 லிருந்து **தேவாலயத்து** வளாகத்தில் போதித்துக் கொண்டிருந்தார். இந்த நிகழ்வுகளுக்குப் பிறகு அவர் தமது மரணத்துக்கு முன்பு கடைசியாக தேவாலயத்தை விட்டு புறப்பட்டுப் போனார். **சீஷர்கள்** தேவாலயத்தைக் குறித்து பிரமிப்புடன் பார்த்து - அந்நாளிலிருந்த யூதர்களில் அநேகரைப் போலவே - அது ஒருபோதும் அழியாது என்று நம்பிக் கொண்டிருந்தனர்.[1]*

*இயேசுவின் நாட்களில் இருந்த இந்த ஆலயம் மூன்றாம் முறை கட்டப்பட்டது. அது மோரியா மலை மீது இருந்த அதே பகுதியில் கட்டப்பட்டிருந்தது. இந்த இடம் ஒரு காலத்தில் எபூசியரின் இடமாக இருந்தது. இங்கே தான் ஆபிரகாம் "சாலேமின் ராஜாவாகிய" "தேவனுடைய உன்னதமான ஆசாரியனான" மெல்கிசேதேக்கை எதிர் கொண்டான் (ஆதியாகமம் 14:18-20; எபிரெயர் 7:1), மேலும் இங்கே தான் ஆபிரகாம் ஈசாக்கை பலியிடப் போனார் (ஆதியாகமம் 22:2). இதே பட்டணத்தில்தான், அநேக ஆண்டுகளுக்குப் பிறகு, தாவீது எபூசியனாகிய அர்வனாவின் கையில் போரடிக்கிற களத்தை கிரயத்துக்கு வாங்கினார் (2 சாமுவேல் 24:16-25).*

*தாவீது தேவனுக்கென்று ஒரு நிரந்தரமான வீட்டைக்கட்ட ஆசையாய் இருந்தான், ஆனால் அப்படி அவர் செய்யாதபடிக்கு தேவன் தடைசெய்தார் (2 சாமுவேல் 7:1-14; 1 இராஜாக்கள் 5:3). கட்டிடப்பணிக்கென தாவீது பொருள்களையும், பணத்தையும், வேலையாட்களையும் சேகரித்து வைத்தார் (1 நாளாகமம் 22:2-16), சாலொமோனின் வழிகாட்டலிலும் மேற்பார்வையிலும் முதல் தேவாலயம் கட்டப்பட்டது (1 இராஜாக்கள் 6-8) இதனால் தான் அது சாலொமோனின் தேவாலயம் எனப்பட்டது. இந்த ஆலயம் கி.மு. 966ல்*

*துவங்கப் பட்டு கி.மு. 959ல் கட்டிடப் பணி நிறைவு பெற்றது. பிரதான அமைப்பு ஏழு வருடத்தில் நிறைவுற்றிருந்தபோதிலும், மேலும் பதிமூன்று வருடங்கள் கூடுதல் கட்டிடப் பணிகள் தொடர்ந்து நடந்தது, வரிசையான அரண்மனைகளும் வேறுபல ராஜாவைச் சார்ந்த கட்டிடங்களும் தேவாலயத்து கூடுதல் மண்டபங்களோடு சேர்க்கப்பட்டன. இதன் விளைவாக இந்த கெம்பீரமிக்க அமைப்பு ஏறக்குறைய "அன்றைய உலக அதிசயங்களில் ஒன்றாக" அமைந்தது. கி.மு. 586ல் நேபுகாத்நேச்சாரால் தேவாலயத்துக்கு தீ வைக்கப்பட்டது (2 இராஜாக்கள் 25:9).*

*பாபிலோனிய சிறையிருப்புக்குப் பின், பெர்சியா ராஜாவாகிய, மகாராஜா கோரேஸ் ஜனங்களை விடுதலையாக்கி அவர்களுடைய தாயகம் திரும்ப அனுமதியளித்தார். கி.மு. 537ல் சுமார் ஐந்தாயிரம் யூதர்கள் யூதாவிற்கும் எருசலேமுக்கும் திரும்பினார்கள் (எஸ்றா 2:64, 65). செருபாபேலின் தலைமையின் கீழ், பழைய இடத்திலேயே தேவாலயத்தை மக்கள் கட்டத்துவங்கினார்கள். தேவாலயத்தின், மற்றும் பலிபீடத்தின் அஸ்திபாரம் போடப்பட்டபின், ஏறக்குறைய இருபது ஆண்டுகள் வேலை நிறுத்தி வைக்கப்பட்டது. தீர்க்கதரிசிகளான ஆகாய் மற்றும் சகரியாவின் தூண்டுதல்களினால் பணி மீண்டும் துவங்கினது (எஸ்றா 5:1; 6:14; சகரியா 1:1). "இரண்டாவது ஆலயமும்" "மீட்கப்பட்ட ஆலயம்" என்றும், "செருபாபேலின் ஆலயம்" என்றும் அழைக்கப்பட்டது, அது கி.மு. 516ல் நிறைவு பெற்றது. சாலொமோனுடைய ஆலயத்தைக் காட்டிலும் தரம் குறைந்ததாய் இது கருதப்பட்டாலும், இது ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகள் நிலைபெற்றது. சாலொமோனுடைய ஆலயத்தைக் காட்டிலும் ஒரு நூற்றாண்டும் அதற்குப் பின் வந்த ஆலயத்தைக் காட்டிலும் மிக நீண்டகாலம் நிலைத்திருந்தது. "உலக பிரசித்த பெற்ற" ஆலயமாக இது விவரிக்கப்படுகிறது.[2]*

*மத்தேயு 24:1ல் இயேசு குறிப்பிடும் ஆலயம் "மூன்றாம் முறை கட்டப்பட்ட ஆலயமாகும்," மகா ஏரோதுவின் கட்டளைகளின் பேரில் கட்டப்பட்டது. கி.மு. 19ல் ஏரோதின் மறுகட்டமைப்பு நிர்மாணப்பணி துவக்கம் பெற்றது.[3] உட்பிரகாரத்தின் உள் பணிகள் $1\frac{1}{2}$ ஆண்டுகளில் முடிந்தது. சம அளவு இடைவெளியில் அமைந்த தூண்களும் வெளிப்புற சேர்க்கைகளும் அடுத்த எட்டு வருடங்களில் நிறைவு பெற்றன.[4] ஆகிலும், தேவாலயத்துப் பணி தொடர்ந்து இயேசுவின் நாட்களில் நடந்து கொண்டிருந்தது (யோவான் 2:20). உண்மையில், கி.பி. 64 வரை கட்டிட விஸ்தரிப்புகள் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது.[5] இந்த ஆலயமே ரோமராணுவத்தால் கி.பி. 70ல் அழிக்கப்பட்டது. ஜோசிபஸ் இந்த அமைப்பின் அழகின் பிரகாரத்தை விவரித்திருக்கிறார்:*

> *இப்பொழுது, தேவாலயத்தின் வெளிமுகப்பும் அதன் முன்புறமும் ... எல்லா இடமும் எடை அதிகமாயுள்ள தங்கத் தகடுகளால் மூடப்பட்டிருந்தது, மற்றும் சூரிய உதயம் தோன்றியவுடனே அவை நெருப்பைப்போல மிக அதிகமாய் ஜொலிக்கும். பலவந்தமாய் ஒருவர் அவைகளை பார்க்க முற்பட்டாலும் அவர்கள் தங்கள் கண்களைத் திரும்பிக்கொள்ள வேண்டிய நிர்பந்தம், சூரியனின் நேரடிக் கதிர்களைப் பார்க்கும் போது என்ன செய்வார்களோ அப்படிச் செய்தார்கள். ஆனால் அந்நியர்களுக்கு இந்த ஆயலம், தொலைவிலிருந்து பார்க்கும்போது, பனியால் சூழப்பட்ட ஒரு*

> மலையைப் போலிருந்தது; அதன் பகுதிகள் ஜொலிக்கும் முலாம் பூசப்பட வில்லை, ஆனால் அளவுக்கதிமான வெண்மையாயிருந்தது.[6]

தால்முத்தில், தேவாலயம் "உலகத்தின் கண்ணாக" குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அதில், "ஏரோதுவின் ஆலயத்தைப் பார்த்திராதவன் அழகைப் பார்த்ததில்லை,"[7] என்றும் சொல்லுகிறது.

சீஷர்களின் பிரமிப்பைத் தூண்டிய **தேவாலயத்துக் கட்டிடங்கள்** அநேகமாக தேவாயத்துக்கு புறம்பே தேவாலயமலையில் நாட்டப்பட்ட சமஅளவு வரிசைத்தூண்களின் தோற்றமாகக் கூட இருக்கலாம். தேவாலயம் நின்ற நிலப்பரப்பை இரண்டு மடங்காக்கி ஏரோது தூண்களை எழுப்பியிருந்தார்.[8] ஜோசிபஸ், "அவர் முழு தேவாலயத்தையும் சுற்றி பெரிய மண்டபங்களால் சூழ்ந்து கொள்ளச் செய்தார் ... இவைகள் மீது பெருந்தொகையை செலவிட்டு, அவர் தேவாலயத்தை அலங்கரித்தது போல வேறு எவரும் பெரிய அளவில் செயல் படுத்தியதில்லை,"[9] என்று எழுதினார். ஃபிலோவும் சில விளக்கங்களை இதுபற்றிக் கொடுத்திருக்கிறார்:

> இந்த தேவாலயத்தின் வெளிப்புறச் சுற்று வளைவு, நீளத்தி லும் அகலத்திலுமாக அதிகப்பட்ச விஸ்தீரணம் பெற்று, மிகவும் விலையுயர்ந்த பாதுகாப்பு பொருட்களால் அலங்கரிக்கப்பட்டு பாதுகாப்பு செய்யப்பட்டிருந்தது. அவைகள் ஒவ்வொன்றிலும் இரட்டை முற்றங்கள் கட்டப்பட்டு, மிக நேர்த்தியான மரம், கல் மற்றும் பலதரப்பட்ட பூரண வடிவு பெற்ற பொருட்களாலும், மிகத் திறமையான பெரிய சிற்பாசாரிகளைக் கொண்டும், மிகக் கவனமாக அக்கரை எடுத்து கண்காணித்த மேற்பார்வையாளர்களின் கண்காணிப்பில் கட்டப்பட்டது. ஆனால் உட்புறச் சுற்று வளைவுகள் குறைந்த விஸ்தீரணம், கட்டிட வடிவமைப்பும் அலங்காரமும் மிக எளிமையாகச் செய்யப்பட்டிருந்தது. அதின் மையத்தில் தேவாலயம், விவரிக்க இயலாத சகல அழகுடன் கட்டி நிறைவுற்றிருந்தது.[10]

தெற்குப் பகுதி தூண்வரிசை, ராஜரீக முற்றம் என்றழைக்கப்பட்டிருந்த பகுதி, மிகவும் மனதைத் தொடுவதாயிருந்தது. மிக நீண்ட பெரிய விளக்கத்தை அளித்தபின், ஜோசிபஸ், "இப்படிப்பட்டவைகளைப் பார்த்திராவர்களுக்கு [அது] நம்புவதற்கு அரியதாகவும், பார்த்தவர்களுக்கு, [அது] ஆச்சரியத்தில் மூழ்கடிப்பதாகவும் உள்ளது" என்றார்.[11] ஆகையால் தேவாலயத்துக் கட்டிடத்தின் கலை அம்சத்தை இயேசுவுக்கு காட்டிய நிகழ்வில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை, அதுவும் அநேகமுறை அதை முன்பே அவர்கள் பார்த்திருக்கிறார்கள்.

**வசனம் 2.** இந்த வடிவமைப்பின் ஆச்சரியமிகு காரியத்தைக் குறித்து பதிலளித்த இயேசு, **இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே? இவ்விடத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டு போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்** என்றார். கர்த்தர் அவர்களிடத்தில் சொல்லுவது என்னவெனில் ஏதோ எதிர்பாராத ஒரு ஆபத்து நிகழப் போகிறது என்பதுதான்; அவருடைய பேச்சு நடை தேவாலயத்துப்பகுதி முற்றிலுமான அழிவைக் காணும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. "ஒரு

கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டு போகும்" எனும் சொற்றொடர் "கட்டிடம் கட்டும் முறையை அப்படியே மாற்றுகிறது."[12]

இயேசு முன்னுரைத்தவைகளை சீஷர்களால் நம்ப முடியவில்லை, ஏனெனில் ஏரோது கட்டிடப்பணிக்கு பயன்படுத்திய கற்கள் கனத்தில் மிக பருமனாக இருந்ததை மனதில் வைத்து இப்படிச் சொல்லியிருக்கலாம். இவைகளில் சில கற்கள் நூறு டன்னுக்கும் மேலான எடையுள்ளவைகளாக இருந்துள்ளன அவைகள் வெளிப்பிரகாரங்களில் பயன்படுத்தப்பட்டன. வெட்டியெடுக்கப்பட்ட பெரிய இந்த சுண்ணாம்பு (வெண்) கற்கள் அவைகள் வெட்டியெடுக்கப்பட்ட இடங்களிலிருந்து கொண்டு வந்து சேர்க்க பல வழிகள் பின்பற்றப்பட்டன: (1) கயிறு, கம்பி இவைகளால் கட்டி முக்காலிகளின் உதவியுடன் தூக்கிக் கொண்டு வருவது, (2) ஒரு வாகனத்துக்கு சக்கரங்கள் கொடுக்கப்படுவது போல கொடுத்து கொண்டு வருவது, (3) அவைகளின் சுற்று வடிவில் சக்கரங்களை இணைத்துக் கொணர்வது, (4) அவைகளின் கீழ் மர உருட்டுகளைப் பொருத்துவது. ஒவ்வொரு கல்லையும் கொண்டு வந்து சேர்ப்பதில் கூட்டங்கூட்டமாக எருதுகள் பயன்படுத்தப் பட்டு, வண்டிகள் ஒன்றன்பின் ஒன்றாக கல்லின் சுமையை இழுத்துவரச் செய்தனர். கற்களை அடுக்கும் உயரத்தில் மண்ணை சரிவான பாதையாக அமைத்து, கல் வேலை முடிந்தவுடன் அவைகளை அப்புறப்படுத்துவர்.

ஜோசிபஸ் அறிவித்தபடி, கி.பி. 70ல் ரோம படை வீரர்கள் தேவாலய மலையை வலிமையான செம்மறியாட்டுக் கடாக்களைக் கொண்டு தாக்கி, வடபக்க வெளிப்புற வாயிற் கற்களை அகற்றினார்கள். கொஞ்சம் வெற்றி கிடைத்தவுடன், ஏணி வைத்து தூண்களின் மேல் ஏறினர். யூதர்களால் தனது படைவீரர்கள் விரட்டியடிக்கப் பட்டதைப் பார்த்த தீத்துராயன், தேவாலய பகுதியை ஊடுறுவும் பொருட்டு வாசல்களில் தீவைக்கும்படி கட்டளையிட்டான், வாயிற் கதவுகளிலிருந்து தூண்கள் வரை அக்கினி பரவியது. இதினால் படைகள் தேவாலய தளத்துக்குச் செல்ல வழி உண்டாயிற்று. எப்படியிருப்பினும் சூழ்ந்து ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தவனாய், தீத்துராயன் தேவாலயத்தை மட்டும் பாதுகாக்கும் பொருட்டு தீயை அணைக்கக் கட்டளையிட்டான். இருந்தாலும், யுத்தத்தின் மத்தியில் தீ தொடர்ந்து பரவிக் கொண்டிருந்தது, சில படைவீரர்கள் வேண்டுமென்றே தேவாலயத்தின் உட்பிரகாரத்தில் தீ வைத்தனர்.[13] தீயினால் சேதமடையாத கற்கள் வெற்றி பெற்ற இராணுவத்தின் கையால் இடித்து தள்ளப்பட்டன.

இயேசு முன்னுரைத்த வார்த்தையின்படி ஒரு கல்லின் மேல் கல்லிராதபடி ஒவ்வொன்றாக மாம்ச ரீதியாக அகற்றப்பட்டது என்று பொருளல்ல; தேவாலயம் தீ வைக்கப்பட்ட சம்பவமே அந்தப் பேச்சு முறை அதைத் திருப்திபடுத்துகிறது (22:7ஐக் காண்க). தேவாலய மலையின் மேல் பகுதி அழிவுண்டபோதிலும், ஏரோதுவின் கட்டிடப் பணியாட்கள் பயன்படுத்திய பெரிய கற்களில் சிலவற்றை மேற்குச் சுவரில் இன்றும் காணலாம். அதுதான் இன்று "புலம்பலின் சுவர்" என்று அழைக்கப்படுகிறது. தேவாலய மலையை விஸ்தரிக்கும் நோக்கில் கட்டப்பட்ட சுவற்றின் மிஞ்சிய பாகம் இது.

தேவாலயத்தின் அழிவு அவர்களின் பாவத்துக்கான தண்டனை என்று இயேசு சொன்னார். ஆதலால், ஏரோதின் தேவாலயம் அழிந்ததற்கும் சாலொமோனின் ஆலயம் - கி.மு. 586ல் அழிவுண்டதற்கும் நெருங்கிய ஒப்பீடு

உண்டு. Douglas R. A. Hare என்பவர் தேவாலயத்தின் முழு அழிவையும் முன்னுரைத்த இயேசுவை "கடைசிகால எரேமியா" என்று ஒப்பிட்டார்.[14] தேவாலயத்தின் அழிவைக்குறித்து, தீர்க்கதரிசிகள் சொன்னதையே இயேசு பேசினார் (எரேமியா 7:14; 26:6, 18; மீகா 3:12). அநேக யூதர்களும் கி.பி. 70ல் எருசலேமின் அழிவை தேவனிடத்திலிருந்து வந்த நியாயத்தீர்ப்பு என்று குறிப்பிடத்தக்க வகையில், கண்ணுற்றனர்.[15] இயேசு இந்த ஆலயத்தின் வீழ்ச்சியைக் குறித்து முன்னறிவித்திருந்த போதிலும், ஆதிசபை அதை தங்களின் கூடுகை இடமாகப் பயன்படுத்தத் தயங்கவில்லை (நடபடிகள் 2:46; 3:1, 11). யூதக் கிறிஸ்தவர்கள் தொடர்ந்து அங்கே போனார்கள் (நடபடிகள் 21:26, 27). ஒருவேளை, அதன் அழிவு சமீபித்து வரும் வரை அவர்கள் கூடி வந்திருக்கலாம்.

## சீஷர்களின் கேள்விகள் (24:3)

**3பின்பு அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்து வந்து, இவைகள் எப்பொழுதும் சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள்.**

**வசனம் 3.** காட்சி தேவாலயத்திலிருந்து **ஒலிவ மலைக்கு** மாறுகிறது, அங்கே கெதரோன் பள்ளத்தாக்கிலிருந்து எருசலேமுக்கு கிழக்கே இந்த மலையிருந்தது (21:1ன் விளக்கவுரையைக் காண்க). யூதரல்லாத வாசகர்களுக்கு எழுதிய மாற்கு ஒலிவமலை "தேவாலயத்துக்கு எதிரில்" இருந்தது என்கிறார் (மாற்கு 13:3), இந்த இடத்திலிருந்து, தேவாலயமலை மற்றும் முழுபட்டணத்தையும் குறித்த ஒரு பரந்த கண்ணோட்டம் இயேசுவுக்கும் அவரைப் பின் பற்றியோருக்கும் உண்டாயிற்று. இந்த இடத்திலிருந்து கண்ணோக்கில் பார்த்தவைகளோடு வெளிப்பாட்டு இலக்கியமும் (சகரியா 14:4), எருசலேமின் வீழ்ச்சி மற்றும் உலகத்தின் முடிவைக் குறித்து பேச ஒரு சரியான இடமாயிற்று.

ஒரு போதகருக்கே உரிய அமர்வுநிலையில், இயேசு **உட்கார்ந்திருந்தார்** (5:1; 13:2; 23:2; 26:55), அப்பொழுது அவருடைய **சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள்.** அவர்கள் பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, மற்றும் யோவான் என்று மாற்கு குறிப்பிடுகிறார் (மாற்கு 13:3). இயேசு அழைப்பித்த முதல் நான்கு சீஷர்கள் இவர்களே (4:18-22). குறைந்த பட்சம் மூன்று பேர் அவர்களில் அவருடைய உள்வட்டத்தில் உட்பட்டிருந்த சீஷர்கள் (17:1ன் விளக்கவுரையைக் காண்க). இந்த மனுஷர்கள் **தனித்து வந்து** தேவாலயத்து அழிவைப் பற்றி அவர் பேசிய தீர்க்கதரிசனத்தை குறித்துக் கேட்டனர். அவர்கள், **இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும்** என்றார்கள். கிரேக்க வசனப்பகுதியில் இரண்டு கேள்விகள் கேட்கப்பட்டதாக சொல்லுகிறது. அவர்கள் முதலில் கேட்ட கேள்வி, "இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்?" இந்தக் கேள்வி தேவாலயத்தின் அழிவைக் குறித்துக் கேட்கப் பட்டது. "இவைகள்" என்பது இந்த அதிகாரத்தில் பயன்படுத்தப்பட்ட திறவுகோல் சொற்றொடர், அது எருசலேமின் அழிவோடு சம்பந்தப்பட்டது. கூடுதலாக, "உமது வருகைக்கும். உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?

எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள்." கிறிஸ்துவின் "வருகையும்" "உலகத்தின் முடிவும்" இலக்கண ரீதியாக ஒன்றிணைக்கப் பட்ட வாக்கியம்,[16] எனவே இதற்குப் தேவைப்படுவது "ஒரு அடையாளம்" மட்டுமே சீஷர்கள் இவைகள் அனைத்தும் ஒரே நேரத்தில் சம்பவிக்கப் போகிறவைகள் என்று நினைத்துக் கொண்டார்கள்

"வருகை" என்பதற்கான கிரேக்கப்பதம் (*parousia*) குறிப்பிடத்தக்க ஒன்று. அது "ஒருவர் முதல்முறையாக வருகை தந்து அவருடைய பிரசன்னத்தை உணர்த்துதல்."[17] ஆகிலும் இந்த வார்த்தை அதிக நுணுக்கமான பொருளையுடையது. கிரேக்க இலக்கியத்தில், *பரவ்ஸியா* என்பது மறைக்கப்பட்டிருந்த நபரின் வெளிப்பாடு, தமது வல்லமையை ஜனங்களுக்கு வெளிப்படுத்துபவராக வருபவர், கூடுதலாக, மிகப் பெரிய உயர் பதவி வகிப்பவர் பார்வையிட வருவது போன்றது, ஒரு ராஜாவோ அல்லது இராயனோ (சக்கரவர்த்தி) தனது தேசத்தைப் பார்வையிட வருவது போன்றது.[18] இந்த இரண்டு விளக்கங்களுமே கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்கிற ரீதியில் பார்த்தால் இரண்டும் ஒன்றாகத் தோன்றும். அவர் தேவனுடைய தெய்வீகக் குமாரனும் இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தருமாய் இருக்கிறார். இந்த நேரத்தில் அவர் மறைவாயிருக்கிறார், அவர் மனித வர்க்கம் அனைத்துக்கும் தம்மை வெளிப்படுத்தி நியாயத்தீர்ப்பிலே தமது வல்லமையை விளங்கப் பண்ணுவார். அவருடைய வருகையானது விசுவாசமுள்ள பின்பற்றாளர்கள் மத்தியில் அவருடைய பிரசன்னத்தின் துவக்க நிலையாக இருக்கும். இந்த *parousia* எனும் பதம் இந்த அதிகாரத்தில் அநேக முறை பயன்படுத்தப் பட்டுள்ளது (24:3, 27, 37, 39). பிற புதிய ஏற்பாட்டு எழுத்துக்களிலும் இயேசுவின் வருகையைக் குறித்துப் பேசப்படுகிறது (1 கொரிந்தியர் 15:23; 1 தெசலோனிக்கேயர் 2:19; 3:13; 4:15; 5:23; 2 தெசலோனிக்கேயர் 2:1, 8; யாக்கோபு 5:7, 8; 2 பேதுரு 1:16; 3:4; 1 யோவான் 2:28).

"உலகத்தின் முடிவு" என்னும் சொற்றொடர் மத்தேயுவில் ஐந்து முறை பயன்படுத்தப்பட்டுள்ளது (13:39, 40, 49; 24:3; 28:20; காண்க எபிரெயர் 9:26). இந்த அனைத்து நிகழ்வுகளிலும், உலகத்தின் முடிவு என்றே தெளிவாக அர்த்தப்படுகிறது, யூதருடைய பொருளாதாரத்தின் முடிவோ அல்லது மோசேயின் யூகமோ அல்ல.

---

குறிப்புகள்

[1]காண்க Philo *Special Laws* 1.14. [2]2 Maccabees 2:22. [3]Josephus *Wars* 1.21.1. [4]Josephus *Antiquities* 15.11.6. [5]Ibid., 20.9.7. [6]Josephus *Wars* 5.5.6. [7]Talmud *Baba Bathra* 4a. [8]Jack P. Lewis குறிப்பிடும்போது "தேவாலயத்தின் சுற்றுப்புற பகுதி அத்தேனே பட்டணத்தில் இருந்த மார்ஸ் மேடையைப்போல" இரண்டு மடங்கு பெரியதாக இருந்தது. (Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 2, The Living Word Commentary [Austin, Tex.: Sweet Publishing Co., 1976], 120.) [9]காண்க Josephus *Antiquities* 15.11.3; 15.11.5 [10]Philo *Special Laws* 1.13. பீலோவின் "உள்வட்டம்" என்பது உள்பிரகாரத்தைச் சுற்றிலும் எண்ணற்ற அறைகள் வரிசையாக இருந்தன, அவை ஆசாரியர்களுக்காகவும், இஸ்ரவேலின் புருஷர்களுக்காவும், ஸ்திரீகளுக்காகவும் கட்டப்பட்டவை.

[11]Josephus *Antiquities* 15.11.5. [12]Ronald A. Hagner, *Matthew 14—28,* Word Biblical Commentary, vol. 33B (Dallas: Word Books, 1995), 688; காண்க Haggai 2:15. [13]Josephus *Wars* 6.4.1–8. [14]Douglas R. A. Hare, *Matthew*, Interpretation (Louisville: John Knox Press, 1993), 273. [15]Josephus *Wars* 6.5.3, 4; Talmud *Shabbath* 119b; *Yoma* 9b. [16]கிரேக்க மொழியில், "வருகைக்கும்" "முடிவுக்கும்" என்பவை ஒரே வாசகத்தில் கட்டுப்பட்டது. [17]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 780. [18]Ibid, 780–81.